**<u>ජාතික ශික්ෂණ විද්‍යා ඩිප්ලෝමාධාරීන් ශ්‍රී ලංකා ගුරු සේවයට බඳවා ගැනීම - 2023 (2018-2020)</u>**

**<u>ස්ථානගත කිරීම සඳහා අයදුම්පත්‍රය</u>**

# <u>Recruitment of National Teaching Diploma holders into Sri Lanka Teacher service- 2023 (2018-2020)/</u>

# <u>Application for the Placement</u>

***<u>தேசிய கற்பித்தல் டிப்ளோமாதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவைக்கு நியமனம் செய்தல் - 2023 (2018-2020)</u>***

***<u>நிலைப்படுத்தலுக்கான விண்ணப்பப் படிவம்</u>***

***1. <u>பொது அறிவுரைகள்</u>***

1.1. *இந் நியமனங்களுக்கான நிலைப்படுத்தல்கள் யாவும் இலக்கம் 2018 மற்றும் 2019.01.25ம் திகதியுடைய இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலின் விதிமுறைகளுக்கமைவாக மேற்கொள்ளப்படும் என்பதுடன் தரவு முறைமையினூடாக காட்சிப்படுத்தப்படும் வெற்றிட்டங்களுக்காக நிலைப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படும்..*

1.2. *இணையத்தளத்திற்குள் பிரவேசிக்க முன்னர் இத்துடன் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் அனைத்தினையும் வாசித்து புரிந்து கொள்ளவேண்டும்.*

1.3. *தாங்கள் கல்வியியல் கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்ட மாகாணத்திலுள்ள தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளிலுள்ள வெற்றிடங்களுக்காக நீங்கள் விண்ணப்பிக்க முடியும்.*

1.4. *நிலைப்படுத்தலானது நீங்கள் இணைத்துக்கொள்ளப்பட்ட மாகாணத்திற்கு முன்னுரிமை வழங்கி <u>தேசிய கல்வி நிறுவகத்தின்</u> பெறுபேற்றுப் பட்டியலில் தங்கள் பாடத்திற்குரிய <u>திறமைகளின் வரிசையினையும்</u> கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்படும்.* ***<u>அத்தியாவசியமான வெற்றிட்டங்களுக்காக, தங்களால் விருப்புத் தெரிவிக்கப்படாதிருந்தாலும், திறமைகளின் அடிப்படையில் பட்டியல்படுத்தப்பட்டுள்ளவர்களில் ஆகக் குறைந்த திறமைகளைப் பெற்றுள்ளவர்களில் இருந்து சேவை அவசியத்தை கருத்தில் கொண்டு அத்தியாவசியமான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கையெடுக்கப்படும் என்பதுடன், தங்களது மாகாணத்தில் போதியளவு வெற்றிடங்கள் இல்லாத பட்சத்தில், வெற்றிடங்கள் நிலவும் வேறு மாகாணங்களுக்கு உங்களை நியமனம் செய்யவேண்டியும் ஏற்படலாம்.</u>***

1.5. *தாங்கள் கல்வியியல் கல்லூரிக்கு தெரிவு செய்யப்படும் போதிருந்த நிரந்தர முகவரியிலிருந்து தற்போதைய நிரந்தர முகவரி மாறுபடுமானால் அதற்கான தகுந்த காரணங்களுடன் புதிய முகவரியை தரவு முறைமைக்குள் உட்செலுத்த வேண்டும் என்பதுடன் தங்களது கோரிக்கையை தேசிய அடையாள அட்டையின் பிரதியொன்றுடன் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கடிதமொன்றுடன்* ncoe.rec23@gmail.com *எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். எனினும் தாங்கள் உட்செலுத்தும் புதிய முகவரிக்குரிய மாகாணத்தில் அமைந்துள்ள தேசிய பாடசாலைகளில் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட வெற்றிடங்கள் மற்றும் மாகாணப் பாடசாலைகளிலுள்ள வெற்றிடங்களை பரீட்சிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படாது என்பதுடன் தங்கள் விருப்புக்குரிய பாடசாலைகளை வரிசைப்படி தெரிவு செய்ய சந்தர்ப்பம்* ***<u>வழங்கப்படமாட்டாது.</u>***

*1.5.1.* *ஆட்சேர்ப்பு நடைபெறும் சந்தர்ப்பத்தின் தங்களது வதிவிட மாகாணத்தில் தேசிய பாடசாலைகளின் வெற்றிடங்கள் மாத்திரம் தங்களுக்கு காட்சிப்படுத்தப்படும் என்பதுடன் தங்களது வதிவிடம் மாறியிருப்பின், குறித்த புதிய வதிவிடத்திற்குரிய மாகாணத்தில் காணப்படும் வெற்றிடங்களுக்காக தாங்கள் விண்ணப்பிக்க உத்தேசிப்பின் அதற்காக வேறு மாகாணம் எனும் மாற்றீட்டினை (other province option) உபயோகித்து தங்களுக்கு அவசியமான மாகாணத்தை தெரிவு செய்ய முடியும்.*

1.5.2 அவ்வாறிருப்பினும் மேலே *1.5* இன் படி தங்கள் நிரந்தர வதிவிட மாற்றத்தின் அடிப்படையில் புதிய முகவரிக்கமைவாக தங்களை நிலைப்படுத்த தீர்மானிக்கப்பட்டாலும் நிலைப்படுத்தலை மேற்கொள்ளும் போது கல்வியியல் கல்லூரிக்கு இணைத்துக் கொள்ளும் போது அம் மாகாணங்களிலிருந்து இணைத்துக்கொள்ளப்பட்ட பயிலுனர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்பதுடன் அவர்களை வெற்றிடங்கள் உள்ள பாடசாலைகளில் நிலைப்படுத்தியதன் பின்னரும் வெற்றிடங்கள் காணப்படின் மாத்திரமே நீங்கள் அங்கு நிலைப்படுத்தப்படுவீர்கள். இதன்போது தங்கள் திறமைகள் எதுவும் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

1.6. அதிபர்களால் வழங்கப்படும் வெற்றிடங்கள் தொடர்பான கடிதங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

1.7. தேசிய பாடசாலைகளில் நிலைப்படுத்தப்படும் பயிலுனர்களின் நியமனங்கள் இவ் அமைச்சினால் வழங்கப்படும் என்பதுடன் மாகாணப் பாடசாலைகளில் நிலைப்படுத்தப்படவிருக்கும் பயிலுனர்களின் பெயர்பட்டியல்கள் உரிய மாகாணங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டதன் பின்னர் அவர்கள் அம் மாகாணங்களுக்குரிய பொதுச் சேவைகள் ஆணைக்குழு அல்லது மாகாணக் கல்வி அமைச்சினால் நியமனம் செய்யப்படுவார்கள்.

1.8. மாகாணப் பாடசாலைகளில் நிலைப்படுத்தல் தொடர்பாக மாகாணக் கல்விச் செயலாளரும் கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நிலைப்படுத்தல்கள் தொடர்பாக கல்விச் செயலாளருமே இறுதித் தீர்மானம் எடுக்க அதிகாரம் கொண்டவர்களாவர்.

1.9. உதவித் தொலைபேசி இலக்கங்களை ***(Help Desk)*** தொடர்புகொள்ளும் போது ஒவ்வொரு தொலைபேசி இலக்கங்களும் வெவ்வேறாக உள்ள முறை தொடர்பாக கருத்தில் கொண்டு அந்த தொலைபேசி இலக்கங்களையே தொடர்புகொள்வதற்கும் தங்களால் முதலாவது தொலைபேசி அழைப்பினை மேற்கொண்டு பிரச்சனைகள் முன்வைக்கப்படும் தொலைபேசி இலக்கத்திற்கே அதன் பின்னர் அழைக்கும் சந்தர்ப்பங்களில் அழைக்குமாறும் தயவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். அதே போன்று *2023.04.21* திகதி முதல் *2023.04.25* திகதி வரையில் மு.ப *08.30* முதல் பி.ப *04.15* வரையில் மாத்திரம் தொலைபேசி அழைப்புக்களுக்கான பதில்கள் வழங்கப்படும்.

1.10. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் பிரசுரிக்கப்படும் இவ் அறிவுறுத்தல்களில் மொழி சார்ந்த முரண்பாடுகள் தோன்றின் சிங்கள மொழி மூலமான அறிவுறுத்தலே சரியானது எனக் கருதப்படும்.

1.11. விண்ணப்ப முடிவுத் திகதி 2023.04.25 திகதி 12.00 நள்ளிரவு.ஆகும்.

## *2.* <u>வெற்றிடங்களை தெரிவு செய்வதற்கான அறிவுரைகள்</u>

*2.1.* தங்கள் பாடம் மற்றும் மொழி மூலத்திற்குரிய தரவு முறைமையில் குறிப்பிடப்பட்டுள்ள மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை, தேசிய பாடசாலைகளில் பாடசாலை அடிப்படையிலும், மாகாணப் பாடசாலைகளில் வெற்றிடங்கள் இருக்கின்றனவா என மாத்திரம் குறிப்பிடப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

*2.2.* தோட்டப்புறம் மற்றும் அது சார்ந்த அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்ட பயிலுனர்கள் ஆட்சேர்ப்பு செய்வதற்கான வர்த்தமானி அறிவித்தலின் *6.3.10* பந்தியின் பிரகாரம் அவர்கள் கல்வியியல் கல்லூரிகளுக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட மாகாணங்களுக்குரிய தோட்டப்புற பாடசாலைகளுக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும். மாகாணப் பாடசாலை வெற்றிடங்களுக்கு மேலதிகமாக அவ் விண்ணப்பதாரர்கள் அட்டவணை *01*இல் குறிப்பிடப்பட்டுள்ள தோட்டப்புறங்களில் அமைந்துள்ள தேசிய பாடசாலைகளில் வெற்றிடங்கள் காணப்படும் பட்சத்தில் மாத்திரம் அவற்றிற்கும் விண்ணப்பிக்க முடியும்.

2.3. தங்கள் பாடத்திற்கு அல்லது மொழி மூலத்திற்கு தாங்கள் நியமனம் செய்யப்படும் மாகாணத்தில் மாகாண அல்லது தேசிய பாடசாலைகளில் வெற்றிடங்கள் இல்லாதிருப்பின் பாடசாலைகளைத் தெரிவு செய்யும் பகுதியில் வேறு மாகாணங்கள் எனும் பகுதியினை *(Option)* தெரிவு செய்து *requests/ comments* பகுதியில் தங்களுக்கு விருப்பமான 03 மாகாணங்களை விருப்பு வரிசைப்படி குறிப்பிடுங்கள்.

**கருத்தில் கொள்க**

2.4. ஆரம்பக் கல்விப் பாடம் (சிங்கள மொழி மூலம்) மற்றும் ஆரம்பக் கல்விப் பாடம் (தமிழ் மொழி மூலம்) போன்றவற்றிற்காக கொ/ நாலந்தா கல்லூரியில் நிலைப்படுத்தப்படும் டிப்ளோமாதாரிகளில் சிங்கள மொழி மூல டிப்ளோமாதாரிகள் நான்கு பேரும் தமிழ் மொழி மூல டிப்ளோமாதாரி ஒருவரும் சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலைக்கும் இணைப்புச் செய்யப்படுவார்கள்.

2.5. அதே போன்று விசேட கல்விப் பாடம் சிங்கள மொழி மூலத்திற்காக கொ/ டீ.எஸ் சேனாநாயக்க கல்லூரியில் நிலைப்படுத்தப்படும் டிப்ளோமாதாரிகளுள் இருவர் மகரமையில் அமைந்துள்ள ஓட்டிசம் விசேட கல்வி நிலையத்தில் இணைப்புச் செய்யப்படுவார்கள்.

2.6. காட்சிப்படுத்தப்படும் பாடசாலை வெற்றிடங்களில் காணப்படும் கஹதுடுவ வெனிவல்கொல சிஷ்யோதா நிலையமானது மத்திய அரசின் கீழ் காணப்படும் விசேட கல்வி நிலையமொன்றாகும்.

## 3. <u>இணையத்தளத்தை உபயோகிப்பதற்கான பொது ஆலோசனைகள்</u>

3.1. தங்களது தேசிய அடையாள அட்டை இலக்கத்தை *user name* ஆக உபயோகித்து தங்களுக்கு இணையத்தளத்தினுள் பிரவேசிப்பதற்கு *(Login)* வாய்ப்பு வழங்கப்படுகின்றது. அவ்வாறாக தரவு முறைமைக்குள் பிரவேசிக்க முடியாத பட்சத்தில் எமது உதவித் தொலைபேசி இலக்கங்களுடன் ***(Help Desk)*** தொடர்புகொள்ளவும்.

3.2. தங்களது தேசிய அடையாள அட்டை இலக்கத்தை *user name* ஆக உபயோத்து இணையத்தளத்தினுள் பிரவேசித்து *(Login)* பதிவு செய்தலை பூரணப்படுத்துவதற்காக தங்களால் கடவுச் சொல் ஒன்றை வழங்கி *(Password)* மீண்டும் பிரவேசிக்க *(Login)* வேண்டும். உங்களது கடவுச் சொல்லை *(Password)* மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது என்பதுடன், ஒரு விண்ணப்பதாரிக்கு ஒரு தடவை மாத்திரமே பதிவு செய்வதற்கான வாய்ப்பு வழங்கப்படும். அதே போன்று முதலாம் தடவை உள்ளீடு செய்யப்படும் தகவல்களை மீண்டும் மீண்டும் மாற்றம் செய்வதற்கான வாய்ப்பும் வழங்கப்படமாட்டாது.

**3.3. நிலைப்படுத்தலின் பின்னர், தங்களுக்குரிய பாடசாலை அல்லது மாகாணம் எது என்பதைத் தெரிவிக்கும் வரையில் தங்களது *User Name* மற்றும் கடவுச் சொல்லை *(Password)* நினைவில் வைத்திருப்பது கட்டாயமாகும். தாங்கள் தரவு முறைமையினுள் பதிவு செய்ததன் பின்னர் கடவுச் சொல்லை மாற்றுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது. அதே போன்று தாங்கள் தரவு முறைமைக்குள் பிரவேசித்து முதல் தடவையாக தகவல்களை உள்ளீடு செய்யும் போது சரியான தகவல்களை உள்ளீடு செய்வதை உறுதிப்படுத்திக் கொள்ளவும். தகவல்களை உள்ளீடு செய்து *Submit* செய்ததன் பின்னர் தாங்கள் உள்ளீடு செய்த தகவல்களில் எந்தவொரு மாற்றங்களையும் மேற்கொள்ள இடமளிக்கப்படமாட்டாது.**

3.4. விண்ணப்பப் படிவங்களைக் கோரும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

3.5. நிகழ்நிலை விண்ணப்பப் படிவத்தில் தனிப்பட்ட தகவல்கள் மற்றும் விருப்பமான சேவை நிலையத்தை தெரிவு செய்தல் ஆகிய பகுதிகள் தங்களால் பூரணப்படுத்தப்படுவது கட்டாயமாகும்.

4. **இணையத்தளத்தை உபயோகிப்பதற்கான தொழில்நுட்ப ஆலோசனைகள்**

4.1. தங்களது தேசிய அடையாள அட்டை இலக்கத்தை *user name* ஆக உபயோகித்து, *"continue"* பொத்தானை ***Click*** செய்து இணையத்தளத்தினுள் பிரவேசித்ததன் *(Login)* பின்னர் கடவுச்சொல்லை *(Password)* வழங்க வேண்டும். தாங்கள் கடவுச் சொல்லை வழங்க முன்னர் அங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளை நன்கு வாசித்து புரிந்துகொண்டதன் பின்னர் மாத்திரம் உரிய இடத்தில் (✓) குறியீட்டை தெரிவு செய்து *"**Register**"* பொத்தானை ***Click*** செய்ய வேண்டும். (தங்களது தேசிய அடையாள அட்டை பழைய இலக்கத்தையுடையது எனின் கட்டாயமாக *"V"* எழுத்தை *Capital* இல் உள்ளீடு செய்யவும்)

4.2. கடவுச் சொல்லில் எழுத்துக்கள், இலக்கம் அல்லது குறியீடுகள் 8 எனினும் உள்ளடங்கியிருத்தல் வேண்டும்.

4.3. அதன் பின்னர் திரையில் ***"****Providing new password is successful****"*** என்பதாக காட்சியளிக்கும். ***"Proceed"*** பொத்தானை ***Click*** செய்ததன் பின்னர் நீங்கள் மீண்டும் முதல் பக்கத்திற்கு வழிப்படுத்தப்படுவீர்கள். முன்னரைப் போன்றே தாங்கள் பதிவு செய்வதற்காக வழங்கிய தேசிய அடையாள இலக்கத்தை வழங்கி *"continue"* பொத்தானை ***Click*** செய்ததன் பின்னர் தங்கள் பதிவு செய்த கடவுச் சொல்லை *(Password)* உபயோகித்து மீண்டும் ஒரு தடவை பிரவேசித்தல் *(Login)* வேண்டும்.

4.4. பின்னர் உரியவாறு தங்களது தனிப்பட்ட தகவல்களை உள்ளீடு செய்து விரும்பிய சேவை நிலையத்தை தெரிவு செய்தல் வேண்டும்.

4.5. முதலில் எமது தளத்திலுள்ள தங்களது தனிப்பட்ட தகவல்களில் ஏதேனும் மாற்றங்கள் காணப்படின். *Edit* பொத்தானை ***Click*** செய்வதனூடாக அத் தகவல்களை தங்களால் மாற்றிக்கொள்ள முடியும். பின்னர் தாங்கள் சிங்களம் அல்லது ஆங்கில மொழி மூல டிப்ளோமாதாரி ஒருவராயின் பெயரை சிங்களத்திலும் தாங்கள் தமிழ் மொழி மூல டிப்ளோமாதாரி எனின் பெயரைத் தமிழிலும் தங்களது பெயர் மற்றும் முகவரி ஆகியனவற்றை அங்கு குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீண்டும் உள்ளீடு செய்தல் வேண்டும். (இத் தகவல்கள் தங்களது நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்படவுள்ளமையினால், தங்களது பெயர் மற்றும் முகவரியை சரியாக உள்ளீடு செய்வதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.)

4.6. தங்களது முகவரியை தரவு முறைமையினுள் உள்ளீடு செய்யும் போது, அதனை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு உள்ளீடு செய்தல் வேண்டும்.

4.6.1. உங்களது முகவரி 02 வரிகளை கொண்டிருப்பின், *Address Line 1* மற்றும் *Address Line 5* நிரலில் உள்ளீடு செய்யவும்.

4.6.2. உங்களது முகவரி 03 வரிகளை கொண்டிருப்பின், *Address Line 1, Address Line 2* மற்றும் *Address Line 5* நிரலில் உள்ளீடு செய்யவும்.

4.6.3. உங்களது முகவரி 04 வரிகளை கொண்டிருப்பின் *Address Line 1, Address Line 2, Address Line 3* மற்றும் *Address Line 5* நிரலில் உள்ளீடு செய்யவும்.

4.6.4. உங்களது முகவரி 05 வரிகளை கொண்டிருப்பின் *Address Line 5* இலும் அமையக்கூடிய வகையில் உள்ளீடு செய்யவும்

4.7. தங்களது விருப்பு வரிசையின் பிரகாரம் வெற்றிடங்களை தெரிவு செய்வதற்கான வாய்ப்பு வழங்கப்படும். இதற்காக வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பான ஆலோசனைகளை பார்க்கவும். அதன் பின்னர் தகவல்களை உள்ளீடு செய்யவும்

4.8. தங்களுக்கு மேலும் இவ் விடயம் தொடர்பாக கோரிக்கைகள் காணப்படின், தங்களது விருப்பு வரிசையின் பிரகாரம் வெற்றிடங்களைத் தெரிவு செய்த பக்கத்தில் காணப்படும் requests/ comments நிரலில் குறிப்பிடவும்.

*4.9.* தங்களால் உள்ளீடு செய்யப்பட்ட தகவல்கள் உள்ளடங்கிய சாராம்சத்தை பரிசோதித்து, அதில் ஏதேனும் பிரச்சனைகள் காணப்படின் உதவித் தொலைபேசி இலக்கங்கள் உள்ள பகுதியிலுள்ள எமது தொலைபேசி இலக்கமொன்றை அழைக்கவும்.

*4.10.* அதன் பின்னர் ***Download Icon*** ஐ *Click* செய்து *PDF* கோவையாக அவ் ஆவணத்தை தரவிறக்கம் செய்து அதனை அச்சிட்டுக் கொள்ளவும். விண்ணப்பப் படிவங்களை பூரணப்படுத்துவதற்கான இறுதித் திகதி வரையில் தங்களது இத் தகவல்கள் அடங்கிய *PDF*ஆவணத்தை தரவிறக்கம் செய்து அச்சிடுவதற்கான சந்தர்ப்பம் காணப்படுகின்றது.

*4.11.* அதன் பின்னர் அதிலுள்ள தரவுகளை சரியான முறையில் பூரணப்படுத்தி, குறித்த விண்ணப்பப் படிவத்தை அரச பாடசாலை அதிபர், பிரிவின் கிராம சேவை அலுவலர், சமாதான நீதவான், சட்டத்தரணி. பிரசித்தி பெற்ற நொத்தாரிசு, பதவி நிலை உத்தியோகத்தர், முப்படை அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி ஒருவர் அல்லது பௌத்த விகாரை ஒன்றின் விகாராதிபதி அல்லது தலைமை பிக்கு அல்லது ஏனைய சமய ஸ்தலங்களுக்குப் பொறுப்பான மதகுருமார்களாக கருதப்படக்கூடிய பதவி வகிக்கும் ஒருவரால் சான்றுப்படுத்தப்பட்டு **sas.te@emis.moe.gov.lk** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு *2025.04.28* திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் அனுப்பிவைப்பது கட்டாயமாகும்.

*4.12.* மின்னஞ்சல் தகவலின் தலைப்பு விடயத்தில் *(Email Subject)* **விண்ணப்பதாரரின் பெயர், பாடம் மற்றும் மொழி மூலத்தைக் கட்டாயமாக்க் குறிப்பிடவும்.**

*4.13.* அவ் விண்ணப்பப் படிவத்தை தங்களிடமே வைத்திருப்பது பிற்காலத்தில் உபயோகப்படலாம்.

*5.* <u>உதவித் தொலைபேசி இலக்கங்கள் ***(Help Desk)***</u>

*011-2785634* - சிங்களம் மற்றும் ஆங்கில மொழி விண்ணப்பதாரர்கள்

*011-2786749* – தமிழ் மொழி மூல விண்ணப்பதாரர்கள்

**<u>அட்டவணை *01*</u>**

| **தொடர் இலக்கம்** | **பாடசாலை கணக்கெடுப்பு இலக்கம்** | **பாடசாலையின் பெயர்** | **மாகாணம்** |
|---|---|---|---|
| *01* | *2180* | மத்துகம சீ.டப்.டப் கன்னங்கர மத்திய மகா வித்தியாலயம் | மேல் |
| *02* | *3256* | க/ ரஜவெல்ல இந்து தேசிய பாடசாலை | மத்திய |
| *03* | *3617* | க/ புஸ்ஸல்லாவ சரஸ்வதி இந்து தேசிய பாடசாலை | மத்திய |
| *04* | *4262* | மா/ பாக்கியம் தேசிய பாடசாலை | மத்திய |
| *05* | *4266* | மா/ இந்து தேசிய பாடசாலை | மத்திய |
| *06* | *5035* | நு/ புனித கேப்ரியல் மகளிர் வித்தியாலயம் | மத்திய |
| *07* | *21125* | ப/ பசறை மத்திய மகா வித்தியாலயம் | ஊவா |
| *08* | *21464* | ப/ சரஸ்வதி மத்திய மகா வித்தியாலயம் | ஊவா |
| *09* | *23060* | ர/ பேர்கியுசன் உயர் கல்லூரி | ஊவா |
| *10* | *23068* | ர/ குழந்தை இயேசு கன்னியர்மடம் | ஊவா |
| *11* | *23544* | இறக்குவானை புனித ஜோன் தமிழ் மகா வித்தியாலயம் | ஊவா |